சுருக்கம்

பள்ளிக்கல்வி – ஆசிரியர் பொது மாறுதல் – ஊராட்சி ஒன்றியம் / நகராட்சி / மாநகராட்சி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் மற்றும் அரசு / நகராட்சி / மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் 2017–18 ஆம் கல்வியாண்டில் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வி [பக5(1)]த் துறை.

அரசாணை (1டி) எண். 256

நாள் : 19.04.2017
(திருவள்ளுவராண்டு 2048, சித்திரை 6 )

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (1டி) எண். 258 பள்ளிக் கல்வித் [பக5(1)]துறை, நாள்.06.07.2016.
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.16020/ஏ1/இ2/2017, நாள்.06.04.2017

********

ஆணை :

மேலே இரண்டில் படிக்கப்பட்ட பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்து, ஆசிரியர் சமுதாயத்தின் நலனுக்காக வெளிப்படையான ஒளிவு மறைவற்ற கலந்தாய்வு பொது மாறுதல் நடைமுறைகள் தொடர்ந்து கடைபிடிக்கப்படும் என்ற அரசின் முடிவிற்கேற்ப பள்ளிக்கல்வித் துறை கட்டுப்பாட்டின்கீழ் பணிபுரியும் அனைத்து வகை ஆசிரியர்களிடையே, 2017–18 ஆம் கல்வியாண்டில் பொது மாறுதல்கள் வழங்குவதற்கு கீழ்க்காணும் நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்று அரசு ஆணையிடுகிறது:–

1. (i) மாவட்டங்களில் அனைத்து வகை ஆசிரியர் பணிநிலையிலும் 01.06.2017 அன்று ஏற்படும் காலிப் பணியிடங்களின் விவரப் பட்டியலை முதலில் முழுமையான வகையில் தயார் செய்திட வேண்டும்.

(ii) தொடக்கக் கல்வித் துறையைப் பொறுத்தமட்டில், உபரி ஆசிரியர்கள் பணியிடங்களை பணிநிரவல் செய்த பின்னரே பொதுமாறுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(iii) கலந்தாய்வுக்கு முன்னர் மாணவர்களின் நலன், ஆசிரியர்களின் நலன் மற்றும் பள்ளிகளின் நலன் கருதி, நிர்வாக காரணங்களின் அடிப்படையில் மாறுதல் வழங்கப்பட வேண்டிய ஆசிரியர்களுக்கு மாறுதல் ஆணைகள் வழங்கிட வேண்டும். தொடக்க/நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைத்து வகை ஆசிரியர்கள், அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து வகை ஆசிரியர்கள் மீது பெறப்பட்டுள்ள புகார்கள் அடிப்படையில் மாறுதல் வழங்கப்பட வேண்டிய ஆசிரியர்களுக்கு சம்மந்தப்பட்ட அலுவலர்கள் நிர்வாக அடிப்படையில் மாறுதல் ஆணைகளை முதலில் வழங்கிட வேண்டும். இம்மாறுதல் அவரது விருப்பத்திற்கு ஏற்ப வழங்கப்படக் கூடாது. மாறுதல் வழங்கப்பட்ட பின்பு, அந்த புகார் உரிய

அலுவலரால் விசாரிக்கப்பட்டு, புகாருக்கு முதல் நிலை ஆதாரம் உள்ள நிகழ்வுகளில், குற்றச்சாட்டுகள் தொடுக்கப்பட்டு, உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட கோப்பில் இக்காரணத்தின் அடிப்படையிலேயே நிர்வாக மாறுதல் சம்பந்தப்பட்ட ஆசிரியருக்கு வழங்கப்பட்டது என்ற விவரம் பதிவு செய்யப்பட வேண்டும். உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில், சம்மந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கையின் அடிப்படையில் பள்ளிக் கல்வி இயக்குநர் மாறுதல் செய்ய வேண்டும்.

(iv) மனமொத்த மாறுதல்

(a) 01.06.2016க்கு முன்னர் பணியில் சேர்ந்தவர்கள் மட்டுமே மனமொத்த மாறுதலில் பங்கேற்கலாம். மனமொத்த மாறுதல்களைப் பொறுத்த மட்டில், பொது மாறுதல் கலந்தாய்வு நடைபெறுவதற்கு முன்னர் மாறுதல் ஆணைகள் வழங்கப்பட வேண்டும். மனமொத்த மாறுதல் பெற்றவர்கள் பொது மாறுதல் கலந்தாய்வில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படக் கூடாது.

(b) மனமொத்த மாறுதல்களைப் பொறுத்தமட்டில், பள்ளிக் கல்வி இயக்குநர் / முதன்மைக் கல்வி அலுவலர் / மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் ஆகியோர் கலந்தாய்வு பொது மாறுதல் நடைபெறுவதற்கு முன்னர் மாறுதல் ஆணைகள் வழங்கிட வேண்டும்.

(c) மனமொத்த மாறுதல் அடிப்படையில், மாறுதல் பெற்றவர்கள் மீண்டும் ஏற்கனவே பணிபுரிந்த பள்ளிக்கே மனமொத்த மாறுதலில் செல்ல அனுமதிக்கப்படக் கூடாது. கடந்த ஆண்டில் மனமொத்த மாறுதல் பெற்றவர்கள் மீண்டும் இக்கல்வியாண்டில் மனமொத்த மாறுதலுக்கு விண்ணப்பிக்க இயலாது.

(v) சிறப்பு நிகழ்வு : 01.06.2016க்குப்பின் கணவன் அல்லது மனைவி திடீரென்று விபத்திலோ அல்லது நோய் வாய்ப்பட்டு இறந்திருந்தால், அத்தகைய ஆசிரியர்கள் குறித்த நிகழ்வுகளில் கலந்தாய்வு குறித்த விதிமுறைகளை கடைபிடிக்காமல் சிறப்பு நிகழ்வாக, சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் / மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள் மாறுதல் வழங்கலாம். எனினும், இது குறித்து அந்தந்த இயக்குநருக்கு ஒட்டுமொத்த அறிக்கை அனுப்பப்பட வேண்டும்.

(vi) மேற்கண்ட நடவடிக்கைகள் முடிவு பெற்றபின், பள்ளிக் கல்வி மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர்கள் குறிப்பிடும் நாட்களில் மாவட்டங்களில் கலந்தாய்வு நடத்தப்பட வேண்டும். கலந்தாய்வு மற்றும் பொது மாறுதல்கள் சார்ந்த நெறிமுறைகளுடன் கூடிய செய்திக் குறிப்பினை அனைத்து செய்தித் தாள்களிலும் முன் கூட்டியே வெளியிட வேண்டும்.

2. பொது மாறுதல் கோருவது சார்ந்த விண்ணப்பங்கள் பெறுவது தொடர்பான அறிவுரைகள் தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களால் தனியாக வழங்கப்படும்.

3. பொதுமாறுதல்கள் வழங்க கீழ்க்காணும் அலகின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட வேண்டும்.

(அ) தொடக்க/ நடுநிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை

(i) ஒன்றியத்திற்குள் / நகராட்சிக்குள் / மாநகராட்சிக்குள் முதலில் வழங்க பரிசீலிக்கப்பட வேண்டும்.

(ii) மாவட்டத்திற்குள் – ஒன்றியம் விட்டு ஒன்றியம் அல்லது மற்ற அலகுகளுக்கு பரிசீலிக்கப்பட வேண்டும்.

(iii) மாவட்டம் விட்டு மாவட்டம்.

(ஆ) அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை

(i) வருவாய் மாவட்டத்திற்குள்
(ii) மாவட்டம் விட்டு மாவட்டம்

4. மாறுதல் கலந்தாய்வில் கலந்து கொள்ள தற்போது பணிபுரியும் பள்ளியில் 01.06.2016க்கு முன்னர் பணியில் சேர்ந்திருத்தல் வேண்டும். எனினும், 2016–17 ஆம் கல்வியாண்டில் பணி நிரவல் பெற்றவர்கள் மற்றும் பதவி உயர்வு பெற்றவர்கள் மாறுதல் கலந்தாய்வில் கலந்துகொள்ள அனுமதி வழங்கலாம்.

5. கீழ்க்காணும் பிரிவினர்களுக்கு ஓர் ஆண்டு பணிக் காலத்திலிருந்து விலக்களிக்கலாம்.

(i) முற்றிலும் கண்பார்வையற்றவர்கள் (Total Blindness).

(ii) இருதய மாற்று அறுவை சிகிச்சை (Heart Transplantation Surgery), சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை (Kidney Transplantation Surgery) செய்தவர்கள் மற்றும் டையாலிசிஸ் சிகிச்சை மேற்கொள்பவர்கள்.

(iii) கடுமையாக பாதிக்கப்பட்ட புற்று நோயாளிகள்.

(iv) இராணுவத்தில் பணிபுரிபவர்களின் மனைவி தங்களின் சொந்த பாதுகாப்பு கருதி மாறுதல் கோருபவர்கள்.

(v) விதவைகள் மற்றும் 40 வயதைக் கடந்த திருமணம் செய்து கொள்ளாத முதிர் கன்னியர்.

(vi) மாற்றுத் திறனாளிகள் சட்டம் 1995ன்படி 40% மற்றும் அதற்கு மேலும் ஊனம் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான சான்றிதழ் பெற்றவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாவட்ட மறுவாழ்வு அலுவலரால் சான்றிதழ் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்).

(vii) மனவளர்ச்சி குன்றிய மற்றும் மாற்றுத் திறனாளி குழந்தைகள் உள்ள பெற்றோர் ஆசிரியர்களாக இருப்பவர்கள். அவ்வாறு உள்ள மாற்றுத் திறனாளி குழந்தைகள் மாற்றுத் திறனாளிகள் சட்டம் 1995ன்படி 40%

மற்றும் அதற்கு மேலும் ஊனம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். மேலும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாவட்ட மறுவாழ்வு அலுவலரால் சான்றிதழ் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

6. ஒரு பணியிடத்திற்கு ஒருவருக்கு மேல் மாறுதல் கோரினால் கீழ்க்கண்ட நெறிமுறைகளைக் கையாண்டு முன்னுரிமை வழங்க வேண்டும் :-

(அ) (i) முற்றிலும் கண்பார்வையற்றவர்கள் (Total Blindness).

(ii) இருதய மாற்று அறுவை சிகிச்சை (Heart Transplantation Surgery), சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை (Kidney Transplantation Surgery) செய்தவர்கள் மற்றும் டையாலிசிஸ் சிகிச்சை மேற்கொள்பவர்கள்.

(iii) கடுமையாக பாதிக்கப்பட்ட புற்று நோயாளிகள்.

(iv) இராணுவத்தில் பணிபுரிபவர்களின் மனைவி தங்களின் சொந்த பாதுகாப்பு கருதி மாறுதல் கோருபவர்கள்.

(v) விதவைகள் மற்றும் 40 வயதைக் கடந்த திருமணம் செய்து கொள்ளாத முதிர் கன்னியர்.

(vi) மாற்றுத் திறனாளிகள் சட்டம் 1995ன்படி 40% மற்றும் அதற்கு மேலும் ஊனம் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான சான்றிதழ் பெற்றவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாவட்ட மறுவாழ்வு அலுவலரால் சான்றிதழ் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்).

(vii) மனவளர்ச்சி குன்றிய மற்றும் மாற்றுத் திறனாளி குழந்தைகள் உள்ள பெற்றோர் ஆசிரியர்களாக இருப்பவர்கள். அவ்வாறு உள்ள மாற்றுத் திறனாளி குழந்தைகள் மாற்றுத் திறனாளிகள் சட்டம் 1995ன்படி 40% மற்றும் அதற்கு மேலும் ஊனம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். மேலும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாவட்ட மறுவாழ்வு அலுவலரால் சான்றிதழ் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(viii) ஒரே இடத்தில் குறைந்தபட்சம் மூன்றாண்டுகள் அதற்கு மேலும் பணியாற்றிய ஆசிரியர்கள். (தற்போது பணிபுரியும் பள்ளியில் 01.06.2014க்கு முன் பணி ஏற்றவர்கள்).

(ix) மேற்கண்ட வகையில் சிறப்பு முன்னுரிமை அடிப்படையில் கடந்த ஆண்டு மாறுதல் பெற்றவர்கள், இதே வகையிலான முன்னுரிமையின் அடிப்படையில் இரண்டு ஆண்டு காலத்திற்கு மாறுதல் பெற இயலாது.

(ஆ) (i) கணவன், மனைவி இருவரும் பணியில் இருப்பவர்கள் எனில், தற்போது கணவர் பணிபுரியும் இடத்தில் இருந்து மனைவி பணிபுரியும் இடமும் அல்லது மனைவி பணிபுரியும் இடத்திலிருந்து கணவர் பணிபுரியும் இடமும் 30 கி.மீ. சுற்றளவுக்கும் அதிகமாக இருக்கும் பட்சத்தில் அவர்களை தனித்தனியே வசிப்பதாகக் கருதி கணவன் / மனைவி பணிபுரிபவர்கள்

(Spouse employed) என்ற அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

(ii) கடந்த ஆண்டில், கலந்தாய்வில் கலந்து கொண்டு, கணவன் / மனைவி இருவரும் பணிபுரிபவர்கள் (Spouse Employed) என்ற தகுதியின் பேரில், மாறுதல் பெற்றவர்கள் மீண்டும் அதே தகுதியின் அடிப்படையில் இந்த ஆண்டும் மாறுதல் பெற இயலாது. இவர்கள் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகே மாறுதல் பெற இயலும்.

(iii) கணவன் / மனைவி என்ற முன்னுரிமை அடிப்படையில் மாறுதல் கோரும் பணியிடமானது, கணவன் அல்லது மனைவி பணிபுரியும் மாவட்டத்தில் உள்ள பணியிடங்களுக்கு மட்டுமே பொருந்தும்.

(iv) கணவன் / மனைவி என்ற முன்னுரிமை, மைய அரசு, மாநில அரசு அலுவலகங்கள், பள்ளிகள்/அரசு சார்ந்த அலுவலகங்கள், அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணியாற்றுபவர்களுக்கு மட்டுமே பொருந்தும். அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட உரிய அலுவலர்களால் பணிச்சான்று வழங்கப்பட வேண்டும். இதில் மைய அரசு / மாநில அரசு / பொதுத் துறை என்ற பாகுபாடு கிடையாது.

7. மாறுதல் கலந்தாய்வு (Transfer counselling) முறையில் ஆசிரியர்கள் பொது மாறுதலின் போது கீழ்க்காணும் நிபந்தனைகளையும் அலுவலர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்:–

(அ) ஏற்கனவே நிர்வாக காரணங்களுக்காக மாற்றப்பட்டு, தற்போது பணிபுரியும் பள்ளியில் மூன்று ஆண்டுகள் பணியாற்றுபவர்கள் மாறுதல் கோரி விண்ணப்பிக்கலாம். ஆயினும், ஏற்கனவே பணியாற்றிய இடத்திற்கு மாறுதல் கோரி விண்ணப்பிக்கக் கூடாது.

(ஆ) அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து வகை ஆசிரியர்களின் மாறுதல்களை முதன்மைக் கல்வி அலுவலர்கள் வழங்க வேண்டும். அரசு உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தலைமையாசிரியர்களின் மாறுதல்களை பள்ளிக் கல்வி இயக்குநர் வழங்க வேண்டும். தொடக்க / நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து வகை ஆசிரியர்கள் மற்றும் தலைமையாசிரியர்களின் மாறுதல்களை மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் ஆணையிட வேண்டும்.

(இ) மாறுதல் கோரும் ஆசிரியர்கள், மாறுதல் விண்ணப்பத்தில், எந்தப் பள்ளிக்கு மாறுதல் கோருகிறார் என்ற விவரத்தைக் குறிப்பிட வேண்டியதில்லை. மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் கோரும் ஆசிரியர், மாறுதல் கோரும் மாவட்டத்தின் பெயரினை மட்டுமே குறிப்பிட வேண்டும். மாறுதல் கோரியுள்ள ஆசிரியர்களின் பெயர்களை ஏற்கனவே குறிப்பிட்டபடி முன்னுரிமைப் பட்டியல் தயாரித்து, அதன்படி ஒரு குறிப்பிட்ட நாளில் மாறுதல் கலந்தாய்வுக்கு (Transfer counselling) வரவழைத்து, அவர்களிடம் தகுதியுள்ள காலிப்பணியிடங்களின் பட்டியலைக் கொடுத்து, அவர்கள் விரும்பிய இடத்திற்கு மாறுதல் அளிக்கப்பட வேண்டும்.

(ஈ) மலைப்பாங்கான இடங்களில் உள்ள தொடக்க / நடுநிலைப் பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் செல்ல தயக்கம் காட்டுவார்கள் என்பதாலும், இதனால்

இவ்விடங்களில் அமைந்துள்ள பள்ளிகளில் ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இல்லாமலிருக்க, மலைச் சுழற்சி முறை (Hill Rotation) அரசாணை (நிலை) எண்.404 கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறை, நாள் 25.5.1995ன்படி மாறுதல்கள் வழங்கப்பட்டு வருகின்றது. இதே முறை இவ்வாண்டும் பின்பற்றப்படலாம். எனவே, பத்தி–3, 4, 5 மற்றும் 6ல் குறிப்பிட்டுள்ள மாறுதல் நெறிமுறைகள் மலை சுழற்சி மாறுதல் முறைக்குப் பொருந்தாது.

(உ) அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களின் மாறுதல்களைப் பொருத்தவரை பள்ளிக் கல்வி இயக்குநரால் மாநிலம் தழுவிய பட்டியல் பேணப்படுவதால், அந்தக் காலிப் பணியிட விவரங்களை பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திலும், முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்திலும் அறிவிப்புப் பலகையில் வெளியிட வேண்டும். உயர்/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு, மாநில அளவில் பள்ளிக் கல்வி இயக்குநரால் பொது மாறுதல் கலந்தாய்வு நடத்தப்பட வேண்டும்.

(ஊ) பள்ளிக் கல்வி இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும் இணை இயக்குநர்கள் கலந்தாய்வு மையங்களில் திடீர் சோதனை செய்து முறையான வகையில் மாறுதல் வழங்கும் பணி நடைபெறுவதை உறுதி செய்து கொள்ளவேண்டும். வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டு, மாறுதல் பணி குறித்த உரிய கால அட்டவணை தயாரிக்கப்பட்ட பின்பு, இவ்விபரங்கள் குறித்து முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் மூலமாக செய்தித் தாள்களில் அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும்.

(எ) (i) தொடக்கக் கல்வித் துறை / பள்ளிக் கல்வித் துறையில் காலிப்பணியிடங்களை கலந்தாய்வில் காட்டும்போது ஆசிரியரின்றி உபரியாக உள்ள காலிப்பணியிடங்களைக் (Surplus Posts without Teachers) காண்பிக்கக் கூடாது. மேலும் அப்பணியிடங்களுக்கு மாறுதல் வழங்குதல் கூடாது.

(ii) தொடக்கக் கல்வித் துறையைப் பொறுத்த வரையில், இரண்டு ஆசிரியர்கள் பணிபுரியும் பள்ளியாக இருந்தால் புதிய ஆசிரியர் பணியில் சேர்ந்த பின்பு தான், மாறுதல் பெற்ற ஆசிரியர் பணியிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும்.

(ஏ) (i) தொடக்கக் கல்வித் துறையிலிருந்து பள்ளிக் கல்வித் துறைக்கு அலகுவிட்டு அலகு மாறுதல், ஆசிரியர் மாறுதல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகிறது.

(ii) பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் பள்ளிக் கல்வித் துறையில் ஏற்கனவே உபரியாக உள்ள நிலையில், அவர்களுக்கு மேற்காண் துறைகளிலிருந்து பள்ளிக் கல்வித் துறைக்கு மாறுதல் வழங்குவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகிறது.

(iii) பள்ளிக் கல்வித் துறையில் பணியாற்றும் ஆசிரியர்கள் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை / ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை / கள்ளர்

சீரமைப்பு / மாநகராட்சிப் பள்ளிகளுக்கு உரிய விதிமுறைகளை பின்பற்றி மாறுதலில் செல்ல தடையின்மைச் சான்று வழங்கலாம்.

8. பள்ளிக் கல்வித் துறையில் உயர்நிலைப் பள்ளி / மேல்நிலைப் பள்ளிகளில் 6,7,8 வகுப்புகளில் ஏற்படும் இடைநிலை ஆசிரியர் காலிப்பணியிடங்கள் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களாக தரம் உயர்த்தப்பட்டு, பட்டதாரி ஆசிரியர்களால் நிரப்பப்பட்டு வருகின்றன. ஆசிரியர்களுக்கான அலகு விட்டு அலகு மாறுதல் வழங்கும் நிகழ்வுகளில் பிற அலகுகளில் 6, 7, 8 வகுப்புகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்கள் மேற்படி பணியிடங்களுக்குப் பொதுமாறுதல் பெற இயலாது.

9. பள்ளிக் கல்வித் துறையில் 6, 7, 8 வகுப்புகளில் காலியாகும் இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் ஒரு முறை பட்டதாரி ஆசிரியர்கள் மாறுதல் பெற்று பணியாற்றியவுடன், அப்பணியிடம் தொடர்ந்து பட்டதாரி ஆசிரியர் பணியிடமாகவே கருதப்பட வேண்டும். அவ்வாறு பூர்த்தி செய்யப்படும் போது அரசாணை எண். 171, பள்ளிக்கல்வி (எம்2) துறை, நாள் 18.08.2008, பத்தி–8ல் குறிப்பிட்டுள்ள அறிவுரைகளை கருத்தில் கொண்டு விதிகளை மீறாமல் பணியிடம் நிரப்பப்பட வேண்டும்.

10. ஆசிரியர் பணியிட மாறுதல்கள், மாறுதல் கலந்தாய்வு (Transfer counselling) முறையில் அவ்வாசிரியர்களின் விருப்பத்திற்கு ஏற்றபடி மாறுதல் செய்யப்படுவதால், மாறுதல் பயணப்படி வழங்கப்பட மாட்டாது.

11. அரசு பெண்கள் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஏற்படும் காலிப் பணியிடங்களில் பெண் ஆசிரியர் மற்றும் பெண் தலைமையாசிரியர் நியமிக்கப்பட வேண்டும். அரசு ஆண்கள் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் ஏற்படும் காலிப் பணியிடங்களில் ஆண் ஆசிரியர் மற்றும் ஆண் தலைமையாசிரியர் மட்டுமே நியமிக்கப்பட வேண்டும். ஆசிரியர்கள் தேவைக்கேற்ப இல்லையென்ற நிலையில், ஆண் மற்றும் பெண் ஆசிரியர்கள் முறையே நியமிக்கப்பட வேண்டும்.

12. இருபாலர் பயிலும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் ஏற்படும் காலிப் பணியிடங்களுக்குப் பொது மாறுதல் விதிகளின்படி ஆண் மற்றும் பெண் ஆசிரியர்கள் / தலைமை ஆசிரியர்களுக்கு மாறுதல் அளிக்கலாம். மேற்படி விதி காலிப் பணியிடங்களுக்கு மட்டுமே பொருந்தும்.

13. பள்ளிக் கல்வி இயக்ககத்தின் கீழ் பணிபுரியும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதுகலைப் பட்டதாரி / பட்டதாரி ஆசிரியர்களுக்கு பொது மாறுதல் கலந்தாய்வும், அதன் பின்னர் பதவி உயர்வு கலந்தாய்வும் நடத்தப்பட வேண்டும். கலந்தாய்வுக்குப் பின்னர் மாணவர்களின் நலன், பள்ளிகளின் நலன் கருதி நிர்வாகக் காரணங்களின் அடிப்படையில் மாறுதல் வழங்கிட அவசியமிருப்பின், பள்ளிக் கல்வித் துறை / தொடக்கக் கல்வித்துறையில் நிர்வாக மாறுதல் தகுதிவாய்ந்த அலுவலர்களால் வழங்கப்பட வேண்டும்.

14. மேலும் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமும், சிறப்புத் தேர்வு மற்றும் நேரடி நியமனம் மூலமும் முறையாக நியமனம் செய்யப்பட்டு, பணிபுரிந்து வரும் கணினி பயிற்றுநர் மற்றும் தொழிற்கல்வி பயிற்றுநர் (வேளாண்மை) ஆகியோருக்கும், ஏனைய அரசுப்

பள்ளி ஆசிரியர்களுக்கு பொது மாறுதல் கலந்தாய்வு மூலம் பணிமாறுதல்/விருப்ப மாறுதல் வழங்குவதை போல் இவர்களுக்கும் பொது மாறுதல் வழங்கிட ஆணை வழங்கப்பட வேண்டும்.

15. மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் அதன் கீழ் இயங்கும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் பணிபுரியும் முதல்வர் / முதுநிலை விரிவுரையாளர் / விரிவுரையாளர் / இளநிலை விரிவுரையாளர்கள், அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பணிபுரியும் முதல்வர்கள் / இளநிலை விரிவுரையாளர்கள் ஆகியோரைப் பொறுத்தவரை மேற்கண்ட மாறுதல் நெறிமுறைகளே பின்பற்றப்பட வேண்டும்.

16. அனைருக்கும் கல்வி திட்டத்தில் பணிபுரியும் ஆசிரியர் பயிற்றுநர்கள் சார்பான பணி மாறுதல் தொடர்பான நெறிமுறைகள் தனியே வழங்கப்படும்.

17. கலந்தாய்வு நாளன்றே மாறுதல் ஆணை வழங்கப்பட வேண்டும்.

2) இந்த வழிகாட்டுதல் நெறிமுறைகளின் அடிப்படையில் தெளிவான நடவடிக்கைகளை வகுத்து கள அலுவலர்களுக்கு அனுப்பும்படி, பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.உதயசந்திரன்
அரசு செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
இயக்குநர், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை–6.
அரசு முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அரசு செயலாளர் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சென்னை–9.
அரசு செயலாளர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–9,
ஆணையர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்மற்றும் சீர்மரபினர் நலத்துறை, சென்னை–5.
அரசு முதன்மைச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–9.

<u>நகல்:–</u>
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
பள்ளிக்கல்வித் (தொ.க1/பக 3/ பக 2/வரவு–செலவு) துறை, சென்னை–9.
அரசு செயலாளரின் முதுநிலைத் தனிச்செயலர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வித் துறையிலுள்ள அனைத்து பிரிவுகள், சென்னை–9.
இருப்புக் கோப்பு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 13/4/17